# கண்ணாடியைப் பார்த்து சிரிப்பாய் சிரிக்கும் காங்கிரஸ்!

தடி எடுத்து சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள். யாருக்கு எதிராக சுற்றுவது என்று தெரியாமலேயே அவர்கள் சுற்றுவதுதான் கேலிக்கூத்தாக உள்ளது. தவறான நேரத்தில் தாறுமாறாக தடியைச் சுழற்றுவதால் எங்கேஎப்படி அடி விழும் என்று தெரியாத நிலையில் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசையும் உள்ளே இழுத்து விட்டிருக்கிறார்கள். **தொகுதி மறுவரையறை தொடர்பாக விஜய் நடத்திய கலந்தாய்வுக் கூட்டம் என்பது காங்கிரசின் கம்பு சுற்றலுக்குள் சிக்கிக் கொண்டது போன்ற நிலையை த.வெ.க. அரசுக்கு உருவாக்கியிருக்கிறது.**

மக்கள் தொகை அடிப்படையில் மாநிலங்களில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை மறுவரையறை செய்யப்படும் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு தெரிவித்தபோதே அதனை எதிர்த்து நின்றது திராவிட முன்னேற்றக் கழகம். முந்தைய ஒன்றிய அரசுகளின் மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை முறையாகக் கடைப்பிடித்து, சரியாக செயல்படுத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களுக்கு முக்கிய பங்கு உண்டு. மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தி சமூக பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தி, இந்தியாவின் வளர்ச்சிக்குத் தமிழ்நாடு துணை நின்றது. தென்மாநிலங்கள் பலவும் இதே பாதையில் பயணிக்கின்றன.

நாட்டின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் பங்களித்த மாநிலங்களைத் தண்டிப்பது போல மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தென்மாநிலங்களின் நாடாளுமன்றத் தொகுதிகளைக் குறைப்பது நேர்மையான ஜனநாயகமல்ல என்பதையும், **தென்மாநிலங்களில் உள்ள தொகுதிகளின் தயவின்றி, வடமாநிலங்களில் உயரும் தொகுதிகளின் எண்ணிக்கையைக் கொண்டே நாடாளுமன்றத்திற்கானப் பெரும்பான்மையைப் பெறும் வாய்ப்பு உருவாகும் என்பதால் இந்த பாரபட்சமான தொகுதி மறுவரையறையை நடைமுறைப்படுத்தக்கூடாது என்றும், நேர்மையான முறையில் சரியான அளவில் (Fair Delimitation) நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதைத்தான் தி.மு.க. தொடக்கம் முதலே வலியுறுத்தி வருகிறது.**

திராவிட மாடல் அரசின் முதலமைச்சரான கழகத் தலைவர் அவர்கள் இது குறித்து அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தி, அதில் எடுத்த முடிவின்படி அனைத்துக் கட்சிக் கூட்டத்தை 532025 அன்று கூட்டினார். தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் இதில் கலந்து கொண்டன. இப்போது ஆட்சியில் உள்ள த.வெ.க.வும் பங்கேற்றது. இதில் 3 முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

***மக்கள்தொகையைக் காரணம்காட்டி தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களின் தொகுதிகளைக் குறைப்பதை ஏற்கவே முடியாது.**

***1971ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படிதான் தொகுதி மறுவரையறை செய்யப்பட வேண்டும். இல்லையெனில், மேலும் 25 ஆண்டுகளுக்கு தொகுதி மறுவரையறையை ஒத்திவைக்க வேண்டும்.**

***நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் விகிதாச்சாரமான 7.18 சதவீதத்தைக் குறைப்பதற்கு ஒரு போதும் ஒப்புக்கொள்ள மாட்டோம்.**

இந்த முக்கிய முடிவுகளுக்கு அ.தி.மு.க., த.வெ.க உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஒப்புதல் அளித்தன. பா.ஜ.க. மட்டுமே இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இதன்பிறகு, 2232025 அன்று மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படும் மாநில முதலமைச்சர்கள், துணை முதலமைச்சர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அடங்கிய கூட்டத்தை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த கழகத் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் நடத்தி, Fair Delimitation என்பதை வலியுறுத்தினார். இதில் காங்கிரஸ் கட்சி ஆளும் கர்நாடகா, தெலங்கானா மாநில முதலமைச்சர்களும் கலந்து கொண்டு ஒப்புதல் அளித்தனர்.

**நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறைக்கான மசோதாவை 1742026 அன்று ஒன்றிய பா.ஜ.க அரசு கொண்டு வந்தபோது அதன் நகலை எரித்தவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த திராவிட நாயகர். தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் பரப்புரை பரபரப்பாக இருந்த அந்த நேரத்திலும், கட்சி அரசியலைக் கடந்து மாநிலத்தின் நலனை முன்னிறுத்திய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.**

பா.ஜ.க அரசுக்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்காத வகையில், எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைத்து, பா.ஜ.க. அரசுக்கு நாடாளுமன்றத்தில் முதல் தோல்வியை ஏற்படுத்தியதிலும் தி.மு.க.வின் பங்களிப்பு முதன்மையானது. Fair Delimitation என்கிற தி.மு.க.வின் உறுதியான நிலைப்பாட்டை காங்கிரஸ் கட்சியும் நன்றாக அறியும். ஆனால், தொகுதி மறுவரையறை மசோதாவை எதிர்த்து அதன் நகலை எரிக்கும் போராட்டத்தைத் தமிழ்நாடு முழுவதும் தி.மு.க.வினர் நடத்திய நாளில், விசில் சின்னம் கோலம் போட்டு விளையாடிக் கொண்டிருந்தார் த.வெ.க. தலைவர். அவருடன் கூட்டணி சேர்ந்து கொண்டு, No Delimitation என்று குட்டையைக் குழப்ப நினைக்கிறது காங்கிரஸ் கட்சி.

இதற்காக முதலமைச்சர் விஜய் தலைமையில் நடந்த எம்.பி.க்கள் கலந்தாய்வுக் கூட்டத்தை தி.மு.க. புறக்கணித்தது. அதற்கானக் காரணத்தை மிகத் தெளிவாக எடுத்துரைத்தார் தி.மு.க.வின் துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி எம்.பி. அவர்கள். தி.மு.க. இந்தக் கூட்டத்தை முழுமையாகப் புறக்கணித்த நிலையில், அதில் கலந்துகொண்ட நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்கள் அனைவரும் 2024 தேர்தலில் கழகத் தலைவர் தலைமையிலான கூட்டணியில் நின்று வென்றவர்கள்தான். கழகத்தின் ஆதரவில் மாநிலங்களவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் கலந்து கொண்டார்கள். கூட்டத்தை நடத்திய முதலமைச்சர் விஜய்யின் த.வெ.க.வுக்கு ஒரு எம்.பி.கூட கிடையாது. தொகுதி மறுவரையறை என்பது மக்கள் பிரச்சினையல்ல என்று திருவாய் மலர்ந்தவர்தான் விஜய். அவர் தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம் என்பது அரசியலின் அவல நகைச்சுவை.

காவிரிப் பிரச்சினைக்காக அனைத்துக் கட்சிகள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. பல கட்சிகளும் இதை வலியுறுத்துகின்றன. த.வெ.க அரசு அதற்கு எந்த ஏற்பாடும் செய்யவில்லை. மேட்டூர் அணை திறக்கப்பட வேண்டிய நாளிலிருந்து ஏறத்தாழ 2 மாதங்கள் கடந்துவிட்டது. இன்னமும் திறக்கப்படவில்லை. டெல்டா மாவட்ட ஆறுகளில் ஆடிப் பெருக்கு நாளிலேயே தண்ணீர் இல்லை.



**கோவி.லெனின்**
தி.மு.க .தகவல்
தொழில்நுட்ப அணி
ஆலோசகர்

**ஆற்றிலிருந்து வயலுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய விவசாயிகள், வீட்டிலிருந்து வாளியில் தண்ணீர் எடுத்து வந்து, ஆற்றில் வைத்து பூசை செய்த வேதனையைத் தமிழ்நாடு இந்த ஆடிப்பெருக்கில்தான் பார்த்தது. ஆடிப் பெருக்கு நாளில் காவிரி விவசாயிகளுக் காக ஆர்ப்பாட்டம் நடத்திய எதிர்க்கட்சித் தலைவர்கழகத்தின் இளம்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை மறுநாள் கைது செய்து அலைக்கழித்தது விஜய் அரசு. காவிரி உரிமைக்காகப் போராடுகிற விவசாயி களைக் கைது செய்கிறது.**

காவிரி ஆணையம் உத்தரவிட்டாலும் கர்நாடகா தண்ணீர் தர மறுத்து வருகிறது. தமிழ்நாட்டிற்கானத் தண்ணீர் உரிமையை முழுமையாகத் தடுக்கும் வகையில் மேகதாது அணையைக் கட்டியே தீருவோம் என்று கர்நாடக அரசு பிடிவாதமாக நிற்கிறது. கர்நாடகத்தை ஆட்சி செய்வது காங்கிரஸ் கட்சி. தமிழ்நாட்டில் த.வெ.க.வின் கூட்டணி ஆட்சியில் பங்கேற்றிருப்பதும் காங்கிரஸ் கட்சிதான். **தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் கர்நாடக காங்கிரஸ் ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக தமிழ்நாட்டின் காங்கிரஸ் எம்.பி.க்கள் விரித்த வலைதான், தொகுதி மறுவரையறை தொடர்பான எம்.பி.க்கள் கலந்தாய்வுக் கூட்டம்.**

ஒரு கட்சியின் எம்.பி.க்களை அழைப்பது முதலமைச்சரின் மரபல்ல. அந்தந்தக் கட்சியின் தலைவர்களைத்தான் முதலமைச்சர் அழைக்க வேண்டும். தலைமைச் செயலகத்தை த.வெ.க.வின் தலைமை அலுவலகம் போல செயல்படுத்தி, கர்நாடகத்தை ஆளுகின்ற கூட்டணிக் கட்சியான காங்கிரஸைக் காப்பாற்றி, தமிழ்நாட்டின் உயிர் ஆதாரப் பிரச்சினையான காவிரி நீர் உரிமையைப் பின்னுக்குத் தள்ளும் வேலையை விஜய் அரசு செய்திருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களின் வாக்குகளைப் பெற்று, கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு வேலை பார்க்கிறாரா விஜய்? தொகுதி மறுவரையறை விவகாரத்தில் அன்றும் இன்றும் உறுதியாக இருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் விகிதாச்சாரமான 7.18 சதவீதம் குறையக்கூடாது என்பதுதான் அந்த உறுதி. அதுதான் Fair Delimitation. இதற்கு மாற்றாக, No Delimitation என்பது போகாத ஊருக்கு காட்டுகிற வழி. பா.ஜ.க.வின் ஸ்லீப்பர் செல்கள் மட்டுமே இந்த வேலையை செய்யும்.

**ராகுல்காந்தி முதல் மாணிக்கம் தாக்கூர் வரை பா.ஜ.கவின் ஸ்லீப்பர் செல்களாகத்தான் செயல்படுகிறார்கள் என்ற சந்தேகம் வலுவாக உள்ளது. சமூக வலைத்தளங்களில் காங்கிரஸ் கட்சியை CongRSS என்றே எழுதுகிறார்கள். த.வெ.க.வைப் பொறுத்த வரை, அந்தக் கட்சி தொடங்கப்பட்ட பிறகு, நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. அதில் போட்டியிடுவதைத் தவிர்த்து, தங்களை பா.ஜ.க.வின் ஸ்லீப்பர் செல் என்று அடையாளம் காட்டிக்கொண்டுதான் அரசியல் களத்திற்கே வந்தது. இரண்டு ஸ்லீப்பர் செல் கட்சிகள் கூட்டணி சேர்ந்துகொண்டு, தி.மு.க மீது பழி போட எடுக்கும் அற்பத்தனமான முயற்சிகள் ஒரு போதும் வெற்றி பெறாது.**

அரசியல் சட்டம் காட்டுகிற வழிமுறையின்படி தொகுதி மறுவரையறை என்பது நடைமுறையாகும். அது மாநில உரிமைகளைப் பாதுகாக்கின்ற வகையில் இருக்க வேண்டும் என்பதுதான் சரியான அணுகுமுறை. தொகுதி மறுவரையறையே கூடாது என்பது பிற மாநிலங்களின் ஆதரவைப் பெற்றுத் தராது. பா.ஜ.க அரசின் நோக்கத்திற்கு மறைமுகமாகத் துணை போகிற வேலையாகும்.

காங்கிரஸ் ஆள்கின்ற கர்நாடகம், தெலங்கானா, கேரள மாநிலங்கள் எதுவும் No Delimitation என்று பேசவில்லை. நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் எம்.பி.க்களும் Fair Delimitation என்றுதான் வலியுறுத்தினார்கள். பிறகு எதற்காக தமிழ்நாட்டில் மட்டும் No Delimitation என்று காங்கிரஸ் குறுக்கும் நெடுக்குமாக ஓடுகிறது? த.வெ.க அரசு எதற்கு துணை போகிறது? கர்நாடக காங்கிரஸ் அரசைக் காப்பாற்றுவது தவிர வேறு என்ன காரணம்?

**காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ப.சிதம்பரம், தொகுதி மறுவரையறை குறித்து ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாட்டில் இருந்த ஒற்றுமை, ஆகஸ்ட் மாதத்தில் ஏன் இல்லை என்று அப்பாவி போல கேட்கிறார். ஏப்ரல் மாதத்தில் இருந்த காங்கிரஸ், மே மாதம் 4ந் தேதிக்குப் பிறகு எங்கே தாவியது? ஏன் தாவியது? ஒற்றுமையைக் குலைத்து, ஓடிப் போனது யார்? காங்கிரஸ்தானே!**

தொகுதி மறுவரையறை விவகாரத்தில் ஒருமித்த நிலையை சிதைத்து, காவிரியில் தமிழ்நாட்டிற்கான உரிமையை மறுத்து, தமிழ்நாட்டு மக்களிடம் அம்பலப்பட்டு நிற்கும் காங்கிரஸ், தி.மு.க.வைப் பார்த்து சிரிக்கலாமா? அந்த சிரிப்பு கண்ணாடி முன் நிற்பவர், அதில் தெரியும் முகத்தைப் பார்த்து விழுந்து விழுந்து சிரிப்பது போன்ற கேலிக்கூத்துதானே!

## கழக ஆட்சியில் கடந்த ஐந்து ஆண்டுகளில்

# நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவே இல்லையா?

## பேரவையில் அமைச்சருக்கு அர.சக்கரபாணி ஆதாரத்துடன் பதிலடி!

**சென்னை, ஆக. 13-**

**“கழக ஆட்சியில் கடந்த ஐந்து ஆண்டுகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவே இல்லையா?” என்று பேரவையில் முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி அறநிலையத்துறை அமைச்சருக்கு ஆதாரத்துடன் பதிலடி கொடுத்தார்.**

**அர. சக்கரபாணி:** இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள், சென்ற ஆட்சியிலே நெல் சேமிப்புக் கிடங்கு எங்கும் கட்டவில்லையென்று ஒரு தவறான தகவலைச் சபையிலே பதிவு செய்தார். நான் அவருக்குச் சொல்லிக்கொள்வது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், அன்றைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் ஒரு நெல்மணிகூட மழையில் நனையக்கூடாது என்பதை உணர்ந்து அவர் பலமுறை சொல்லியிருக்கிறார். ஒருமுறை தொலைக்காட்சியிலே நெல் மூட்டைகளெல்லாம் நனைவதைப் பார்த்துவிட்டு, என்னையும், அன்றைக்கு வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் உடனே இல்லத்திற்கு வரச்சொல்லி இனிமேல் தமிழ்நாட்டிலே எங்கும் நெல்மணிகள் மழையில் நனையக்கூடாது. நாளைக்கு தலைமைச் செயலாளர் அவர்களை அழைத்து, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு ஆய்வுக் கூட்டத்தை நடத்துங்கள் என்று சொல்லி, அதன் அடிப்படையிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபின்பு, 18 மாவட்டங்களில் சுமார் 54 இடங்களில் 7.33 இலட்சம் மெட்ரிக்டன் சுமார் 383 நவீன சேமிப்புத்தளங்கள் சுமார் 825 கோடியே 79 இலட்சம் ரூபாயில் அமைக்கப்பட்டு,

அதில் ரூ.331 கோடி அளவில் 4.03 இலட்சம் மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட 253 சேமிப்புத்தளங்கள் அன்றைய முதலமைச்சர் அவர்களால் திறந்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டன. அதோடு மீதமுள்ள 3.30 இலட்சம் மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட 130 சேமிப்புத் தளங்கள் சுமார் 494 கோடியே 71 இலட்சம் ரூபாயில் இப்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. அது விரைவிலே முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்கவிருக்கிறார்கள்.

எனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நெல் சேமிப்புத்தளங்கள் நிறைய கட்டப்பட்டிருக்கிறது. குறிப்பாக நீங்கள் தஞ்சாவூருக்கு செல்லுங்கள். நடுவூர் என்ற இடத்தில் ஒரு இலட்சம் மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட பெரிய சேமிப்புக் கிடங்கு, ஒரு இலட்சம் மெட்ரிக்டன் அளவில் நெல்லை சேமித்து வைப்பதற்காக



சேமிப்பு கிடங்கு கட்டப்பட்டுள்ளது. பல இடங்களில் டெல்டா மாவட்டமாக இருந்தாலும் சரி, டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் நெல் சேமிப்புத்தளங்கள் கட்டப்பட்டு வருகிறது.

கடந்த வேளாண்மை உழவர் நலத் துறை மானியக் கோரிக்கையில் எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த இடங்களில் சுமார் ரூ.394 கோடியில் நெல் சேமிப்புத்தளங்கள் கட்டப்படும், அதற்காக நிதி ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வேளாண்மை உழவர் நலத் துறை மானியக் கோரிக்கையை கடந்த ஆண்டில் அதைப் பார்க்கவேண்டுமென்று இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழு!**

**அர. சக்கரபாணி:** உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள், அதாவது நேரடி கொள்முதல் நிலையம் திறப்பதற்கு அந்தந்த கட்சிக்காரர்கள் திறக்கிறார்கள் என்று தவறான தகவலை சொல்கிறார்கள். கடந்த ஆட்சியில் ஒரு நெல் நேரடி கொள்முதல் நிலையம் திறக்க வேண்டுமென்றால், மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு குழு, மாவட்ட ஆட்சித் தலைவர், (விவசாயம்), (கூட்டுறவு) மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேர்முக உதவியாளர் சங்கத்தினுடைய இணைப் பதிவாளர், வேளாண்மை இணை இயக்குநர், 2 விவசாய சங்கப் பிரதிநிதி, தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்தின் RM அல்லது SRM என 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு, மக்கள் பிரதிநிதிகள், விவசாயிகள், எங்கெங்கு நேரடி கொள்முதல் நிலையம் வேண்டுமென்று நேரடி கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்களோ, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கேட்கிறார்களோ அங்கெங்கெல்லாம் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறந்தோம்.

அது 2024-25ல் 4 ஆயிரம் இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 1972லிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 4 ஆயிரம் இடத்தில் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டது 2024 -25ல்தான். அரிசி கருப்பாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பின்பு, இந்திய உணவுக் கழகம் என்ன சொல்லி இருந்தார்கள் என்றால், ஒரு உத்தரவை பிறப்பித்திருந்தார்கள்.

**மக்கள் மகிழும் வண்ணம் அரிசி வழங்கினோம்!**

அனைத்து அரசு ஆலைகளிலும் கலர் சார்டர் இயந்திரங்கள் பொருத்தப்படும் என்று ஆணை பிறப்பித்திருந்தார்கள். ஆனால், கடந்த காலத்தில் அது செயல்படுத்தப்படவில்லை; தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்தவுடன், முதலமைச்சர் அண்ணன் ஸ்டாலின் அவர்கள், மக்களுக்கு. தரமான அரிசி தரவேண்டுமென்று உத்தரவிட்டார்கள்.

எனவே, கடந்த காலத்தில் 376 ஆலைகள் மட்டுமே இருந்தன. ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, 623 அரிசி ஆலைகள் எண்ணிக்கையை உயர்த்தி, அனைத்து ஆலைகளிலும் 30 இலட்சம், 50 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கலர் சார்டர் இயந்திரங்களைப் பொருத்தி, மக்களுக்கு பழுப்பு, கருப்பு இல்லாத அரிசி கடந்த மே மாதம் வரை வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டிலிருக்கின்ற 38,000 நியாய விலைக் கடைகளிலும், அரிசி தரமாக இல்லையென்று எங்கும் மக்களிடமிருந்து புகார் வரவில்லை, மக்கள் மகிழும் வண்ணம்தான் நாங்கள் அரிசி வழங்கினோம் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**கூலி உயர்வு வழங்கப்பட்டது!**

அதேபோன்று, தவறு நடப்பதாக தெரிவித்தார்கள்; அதற்கு எங்கள் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே, 2021 டிசம்பர் 31 ஆம் தேதியன்று தஞ்சையில் நடைபெற்ற அரசு விழாவில் என்ன சொன்னார் என்றால், விவசாயிகள் நெல் வாங்கும் இடங்களில் எந்தப் பிரச்சினையும் வரக்கூடாது என்பதற்காக, அங்கு பணி புரிகின்ற ஏழை தொழிலாளர் பெருமக்களுக்கு, மூட்டைக்கு 3.25 ரூபாய்தான் கூலி கொடுக்கப்பட்டதிலிருந்து, 10 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தார்கள். பட்டியல் எழுத்தர், உதவுபவர், காவலர்களுக்கு சம்பளத்தினை உயர்த்திக் கொடுத்தார்கள். பட்டியல் எழுத்தர்களுக்கு தினப்படி ரூ.120/ம், உதவுபவர்களுக்கு ரூ.100/ம், காவலர்களுக்கு ரூ.80/ என்றவகையில் உயர்த்திக் கொடுத்து, ஆண்டிற்கு 83 கோடி ரூபாய் அதிகம் செலவானாலும் பரவாயில்லை, எந்தத் தவறும் நிகழ்ந்துவிடக் கூடாது என்று எண்ணி, இவையனைத்தையும் உயர்த்திக் கொடுத்தார்கள்.

இவ்வாறு அர.சக்கரபாணி அவர்கள் பேசினார்.